# அவசர கூட்டப்பொருட்கள்

1. நாகர்கோவில் மாநகராட்சியில் புதிய அலுவலக கட்டிடம் கலைவாணர் கலையரங்க வளாகத்தினுள் மாநில நிதியின் கீழ் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்ட, நிர்வாக அனுமதி பெறப்பட்டது. பின்னர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s.True Wave Associates சென்னை நிறுவனத்திற்கு 06.09.2018 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.

பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைப்பெற்ற எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் 22.09.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புதிய அலுவலக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைப்பெற்று வந்த நிலையில், நாகர்கோவில் நகராட்சியானது 01.03.2019 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே கூடுதலாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளதால், கூடுதலாக வடிவமைப்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ள தளத்திற்கு கூடுதலாக ஒரு தளம் அமைத்திட வேண்டியது அவசியமாகிறது. மேற்படி கட்டிடத்தில் 52 மன்ற உறுப்பினர்களுடன் நகராட்சி மன்றமாக ஆரம்பித்திட தயார் செய்யப்பட்டது. தற்சமயம் நாகர்கோவில் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், மேலும் சுற்றியுள்ள பேரூராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துக்கள் இணைக்கப்பட வாய்ப்புள்ளதால் அதனை எதிர்நோக்கி 100 மாமன்ற உறுப்பினர்கள் அமர்ந்து கூட்டம் நடத்தும் வகையில் பிரத்யேகமாக வடிவமைத்திட வேண்டியது அவசியமாகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையரக மேற்பார்வை பொறியாளர் அறிவுரையின்படி, சாதாரணமான 3.30m உயரத்தில் நகர்மன்ற கூடம் அமைத்திடாமல் அடுக்கு வகையில் இருக்கைகள் அமைத்திடவும் அதற்கான 7.00m உயரத்தில் அமைக்கப்படவேண்டியது அவசியமாகிறது. மேற்படி கட்டடம் புதிய அலுவலக அமையப்பெற்ற பகுதியானது பாலமோர் சாலையிலிருந்து இயற்கையாகவே தாழ்வாக அமையப்பெற்றுள்ளது. இந்த இடத்தில் அலுவலக கட்டிடம் பிராதான சாலையின் மட்டத்திற்கு தரைதளப்பகுதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் தரைதளப்பகுதிக்கு கீழே வாகனதளம் இருப்பதால் வாகனங்களை நிறுத்துவதற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அலுவலகத்திற்கு வரும் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தரை தளத்திற்கு நுழையாத வகையில் பிரத்யோகமான சாய்வுதளம் மற்றும் பாலம் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

சாலை மட்டத்தில் இருந்து அலுவலக அமைவிடம் 3.00m கீழ் உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் உட்புகுவதை தடுக்கும் வகையில் மற்றும் கட்டிட கூரையில் இருந்து மழைநீரை தேக்கி மழைநீர் சேகரிப்பு தொட்டியாகவும் அமைத்திட வடிவமைப்பு செய்வது அவசியமாகிறது. மேலும் மழைநீர் வாறுகால் வழியாக மழைநீர் சேகரமாகும் தொட்டியில் உள்ள மழைநீரை தீ விபத்தினை எதிர்கொள்ளும் வகையிலும் அமைக்கப்படவிருக்கும் புல்வெளிகளுக்கும் பயன்படுத்திட வகையில் வடிவமைத்திட அவசியமாகின்றது. ஏற்கனவே நிர்வாக அனுமதியுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதியில் மேற்படி அலுவலக கட்டட பணியில் ஒரு எண்ணம் மின்தூக்கி (LIFT) அமைத்திட வழிவகை செய்யப்பட்டது. தற்சமயம் கூடுதல் தளம் மற்றும் கூடுதல் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும்

இயக்குதல் மற்றும் பராமரித்தல் செலவினங்களை கையாளும் வகையில் கூடுதலாக ஒரு மின்தூக்கி தேவை என்பது அவசியமாகிறது. மேற்படி மின் தூக்கியினை அலுவலக உபகரணங்கள் பொதுமக்கள் செல்வதற்கும், உயர்மட்ட அலுவலர்கள் செல்வதற்கும் ஏதுவாக செயல்படுத்திட அவசியமாகிறது.

மேற்படி நாகர்கோவில் மாநகராட்சி புராதான நகரமாக உள்ளதால் பழைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் முகப்பு தோற்றம் அமைத்திட ஏதுவாக முகப்பு தோற்றம் (Elevation) அமைப்பது அவசியமாகிறது.

எனவே மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளை செய்வதற்கு ஏதுவாக ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி செய்ய மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7558/2014/இ1

**தீர்மானம் எண்.351 – அங்கீகரிக்கப்பட்டது**

2. இம்மாநகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் இயற்கை இடர்பாட்டினால் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020-21-ன் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்து 'கீழ்கண்ட நிதி பங்களிப்பின் படி பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் எண்.17349/2019/இ3, நாள். 14.07.2019 –ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| Name of ULB | Amount allotted | TURIP Grand | ULB Contribution |
| Nagercoil | 500.00 | 375.00 | 125.00 |

மேற்கண்ட நிதி பங்களிப்பின்படி ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டது.

| வ.எண் | பணியின் பெயர் | நீளம் (மீட்டரில்) | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1, கட்டையன்விளை சாலை, வார்டு எண்.7 புளியடி சாலை, வார்டு எண்.9 ஆராட்டு ரோடு, வார்டு எண்.18, வையாலிவிளை சந்தி தெரு, வார்டு எண்.19, லாலா விளை சாலை, வார்டு எண்.22, ஞானம் காலனி, வார்டு எண்.25, நடுகாட்டு இசக்கியம்மன் சாலை, வார்டு எண்.25, ஜோ டேனியல் தெரு, வார்டு எண்.26 கிறிஸ்து நகர் மெயின் சாலை மற்றும் வார்டு எண்.49 தட்டான்விளை சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைக்கும் பணி – சிப்பம்1 | 3945.00 | 225.00 |

| | | | |
|---|---|---|---|
| 2 | வார்டு எண்.20 CTM Puram சாலை, வார்டு எண்.38 வேதநகர் முதல் வட்டவிளை சாலை, சிவன் தெரு மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா சாலை, வார்டு எண்.39 பட்டகசாலியன் முதல் கலை நகர், அல்போன்ஷா கார்டன், கலைநகர் புது தெரு, வார்டு எண்.40 வட்டக்கரை சாலை, வார்டு எண்.42 ஹவுசிங் போர்டு காலனி சாலை, வார்டு எண்.43 சைமன் நகர் சாலை, வார்டு எண்.44 ஜேக்கப் தெரு, வார்டு எண்.48 சரலூர் முதல் DVD காலனி சாலை மற்றும் வார்டு எண்.42 50 பொன்னப்ப நாடார் காலனி ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைக்கும் பணி – சிப்பம் 2 | 5650.00 | 275.00 |
| | மொத்தம் | 9595.00 | 500.00 |

மேற்கண்டவாறு நிதி ஒதுக்கீட்டில் மேற்படி தேர்வு செய்யப்பட்ட பணியினை ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4007/2020/இ3

## தீர்மானம் எண்.352 – அங்கீகரிக்கப்பட்டது

3. நாகர்கோவில் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை பணி மேற்கொள்ளும் பொருட்டு, மாநகர பகுதியில் உள்ள 8 பள்ளி மற்றும் கல்லூரிகள் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிட்சை அளிக்கும் பொருட்டு தற்காலிகமாக COVID -19 கவனிப்பு மையமாக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி மையங்களில் துாய்மை பணிகள் மேற்கொள்ள மாநகராட்சியில் பணிபுரியும் 50 நிரந்தர துாய்மை பணியாளர்கள் ப்யன்படுத்தப்பட்டு வருகின்றனர். இதனால் மாநகரின் துாய்மை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளமையால் 50 தனியார் ஒப்பந்த துாய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த துப்புரவு ஆய்வாளர்களின் 14.07.2020ம் தேதிய அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.KDis.No.28369/J3/2018, நாள்.04.12.2018-ன் படி 1111 துாய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது நிரந்தர துாய்மை பணியாளர்கள் – 228, மற்றும் ஒப்பந்த துாய்மை பணியாளர்கள் 657 என ஆக மொத்தம் 885 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மேற்படி ஒப்பந்த பணியாளர்கள் 2017-2018-ம் ஆண்டு மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி நாள் 1க்கு ரூ.465/- என்ற அடிப்படையில் மற்றும் அதனுடன் பணியாளர்களுக்கு செலுத்தப்படும் EPF மற்றும் ESI சீருடைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுடன் சேர்த்து மதிப்பீடு தயார் செய்து 300 பணியாளர்கள் பணியமர்த்தும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. Southern Solid Waste Management நிறுவனத்திற்கு ஒப்பந்தம்

வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நபர் 1க்கு நாள் 1க்கு ரூ.544/- என ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிக்கு பள்ளி, கல்லூரிகளில் செயல்படும் COVID -19 தற்காலிக மையத்திற்க 50 நிரந்தர துாய்மை பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையால், மாநகரின் துாய்மை பணிக்கு 50 தனியார் ஒப்பந்த துாய்மை பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் தற்போது 2020-2021-ம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் துாய்மை பணியாளர்களுக்கு தினக்கூலி நாள் 1க்கு ரூ.615/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (செயல்முறை ஆணை எண்.A1/9953/2020 நாள். 14.07.2020) மேற்படி தினக்கூலி அடிப்படையில் EPF மற்றும் ESI பாதுகாப்பு உபகரணங்களுடன் சேர்த்து மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பட்சத்தில் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையில் நாகர்கோவில் மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள துாய்மை பணியாளர்கள் அடிப்படையில் நிரந்தர துாய்மை பணியாளர்கள் ஓய்வுபெறும் போது ஏற்படும் காலியிடங்களிலும் தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் Out Sourcing முறையில் ஒப்பந்த பணியாளர்கள் பணியமர்த்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 657 ஒப்பந்த துாய்மை பணியாளர்கள் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டின் அடிப்படையில் நபர் 1க்கு நாள் 1க்கு ரூ.544/- விகிதத்தில் ஒப்பந்தம் வழங்கியுள்ள "Southern Solid Waste Management Service" நிறுவனம் மூலம் தற்போது மாநகரின் துாய்மை பணிக்கு அவசரமாக 50 ஒப்பந்த துாய்மை பணியாளர்கள் 16.07.2020 முதல் கொரோனா பேரிடர் பணி முடியும் வரை தற்காலிகமாக பணியமர்த்தும் பொருட்டு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அ. அங்கீகரிக்கலாம்

ஆ. கோவிட் 19 அவசர அவசியம் கருதி மாமன்ற ஒப்புதலினை எதிர்நோக்கி ஆணையர் / தனி அலுவலர் அவர்கள் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1133/2020/எச்1

**தீர்மானம் எண்.353 – அங்கீகரிக்கப்பட்டது**